முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்**

# மட்டம் I பரீட்சை – 2021 சனவரி

# (104) வணிகச் சூழல்

(Business Environment)

2021-03-14
பிற்பகல்
[02.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**:**

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.10*** *வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் முறைசாரா அமைப்பு (informal organization) ஒன்றிற்கான ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) சந்தைப்படுத்தல் திணைக்களம்
(2) முகநூல் அரட்டைக் குழு
(3) இலங்கை மத்திய வங்கி
(4) சுகாதார அமைச்சு

**1.2** பின்வருவனவற்றுள் முறைசார் வணிகம் (formal business) ஒன்றின் பண்பாக (characteristic) **அமையாதது** எது?

(1) பொருளாதாரச் செயற்பாடொன்றாக இருத்தல்
(2) தொடர்ச்சியான செயன்முறை ஒன்றில் ஈடுபடுதல்
(3) இடர் மற்றும் நிச்சயமற்றதன்மை காணப்படாமை
(4) இலாபத்தினால் ஊக்கமளிக்கப்படுதல்.

**1.3** பின்வருவனவற்றுள் வணிக நிறுவனங்களை தனியார் நிறுவனங்களாகவும் பொது நிறுவனங்களாகவும் வகைப்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது எது?

(1) உற்பத்தியின் தன்மை
(2) நோக்கம் (objective)
(3) அளவு (size)
(4) உடமை (ownership)

**1.4** பின்வருவனவற்றுள் வணிக நெறிமுறைகளை மீறுகின்ற ஒரு சந்தர்ப்பமாக அமைந்திருப்பது எது?

(1) போட்டி வணிகம் ஒன்றின் தகவல்களைத் திருடுதல்.
(2) தவறான தகவல்களை வழங்குதல்.
(3) வெளித் தரப்பினர் ஒருவருக்கு வணிகம் ஒன்றின் இரகசியத் தகவல்களை விற்பனை செய்தல்
(4) மேற்கூறிய யாவும்.

**1.5** பின்வருவனவற்றுள் நிறுவன சமூகப் பொறுப்புடமையின் (CSR) ஒரு நன்மை **அல்லாதது** எது?

(1) இது எதிர்கால நாட்டதாரர்களை ஈர்ப்பதற்கு உதவுகிறது.
(2) இது வணிகத்தின் பிம்பத்தை (image) மேம்படுத்துகிறது.
(3) இது இலாப நோக்கத்துடன் முரண்பாட்டைக் கொண்டிருக்கிறது.
(4) இது வாடிக்கையாளர்களுடனான உறவுகளை விருத்தி செய்கிறது.

**1.6** சேவைகளுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக :

**(a)** சேவைகள் கண்ணுக்குப் புலப்படாதவையாகும்.
**(b)** சேவைகளைச் சேமித்து வைத்து பின்னர் பயன்படுத்த முடியும்.
**(c)** சேவைகளை உற்பத்தி செய்ய அதிக உழைப்பு பயன்படுத்தப்படுகிறது.
**(d)** சேவை ஒன்றின் உற்பத்தியும் நுகர்வும் ஒரே சமயத்தில் நிகழ்கின்றன.

மேலுள்ளவற்றுள், சரியான கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.
(2) **(c)** யும் **(d)** யும் மாத்திரம்.
(3) **(a)** யும் **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.
(4) **(a)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்.

**1.7** பின்வருவனவற்றுள் கூட்டு முயற்சி (Joint Venture) ஒன்றின் அம்சம் (feature) **அல்லாதது** எது?

(1) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர் பங்குபெறுவர்.
(2) நீண்ட கால நோக்கமொன்றிற்கான ஒரு நீண்ட காலச் செயற்றிட்டத்தை உள்ளடக்கியது.
(3) பதிவு செய்தல் தேவையற்றது.
(4) தனியான சட்ட ஆளுமை அற்றது.

**1.8** பின்வருவனவற்றுள் யார் நிகழ் நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் (Real Time Gross Settlement System) ***பங்கேற்கவில்லை***?

(1) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (2) இலங்கை மத்திய வங்கி

(3) ஊழியர் நம்பிக்கை நிதியம் (4) ஊழியர் சேமலாப நிதியம்

**1.9** பின்வருவனவற்றுள் கம்பனி ஒன்றைக் கூட்டிணைப்பதற்கு **தேவையற்ற** ஆவணம் எது?

(1) பணிப்பாளர்களின் சம்மதம் (2) சங்க அமைப்பு விதிகள்

(3) கடந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் (4) செயலாளர் / செயலாளர்களின் சம்மதம்

**1.10** பின்வருவனவற்றுள் சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனம் (SME) ஒன்றின் தோல்விக்கான ஒரு காரணமாக இருப்பது எது?

(1) முகாமைத் திறன்களின் குறைபாடு.

(2) தொழில்முயற்சி கலாசாரம் ஒன்றை விருத்தி செய்தல்.

(3) ஆய்வு, அபிவிருத்திகளில் முதலீடு செய்தல்.

(4) சிறந்த தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.11** தொழில் பாதுகாப்பு (Job security) என்பது விருப்பத்திற்கான (want) ஓர் உதாரணமாகும்.

**1.12** வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றின் உயர்ந்தபட்ச பங்குதாரர்களின் எண்ணிக்கை 50 ஆகும்.

**1.13** உளவியல் காரணிகள், பயனுறுதிமிக்க தொடர்பாடலுக்கான தடைகளாகத் தொழிற்படுகின்றன.

**1.14** தனியுடமை வியாபாரம் ஒன்றின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும் (limited).

**1.15** கம்பனி ஒன்றின் பங்குகளில் அல்லது தனிச்சங்களில் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ள பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கின்ற ஆவணம் முன்விபரணம் (prospectus) என அழைக்கப்படுகிறது.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப்புத்தகத்தில் வினாவின் இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதுக.*

**1.16** பங்குடமை ஒன்றின் இரண்டு (02) அடிப்படை அம்சங்களைக் (features) குறிப்பிடுக.

**1.17** “நிலைபேறான சூழல் (Sustainable Environment)” என்பதன் கருத்தைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** அரசாங்கத்தின் இரண்டு (02) நோக்கங்களைக் (objectives) குறிப்பிடுக.

**1.19** நிறுவனமொன்று அதன் ஊழியர்களின் பொருட்டான நிறுவன சமூகப் பொறுப்புடமையை (CSR) நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளக்கூடிய இரண்டு (02) நடவடிக்கைகளைக் (steps) குறிப்பிடுக.

**1.20** காசோலை ஒன்றின் இரண்டு (02) கூறுகளைக் (elements) குறிப்பிடுக.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

வணிக ஆதரவுச் சேவைகள் சிறியது முதல் பெரியது வரையிலான சகல நிறுவனங்களின் வணிகங்களிலும் மிகவும் முக்கியமான விடயமாக மாறியுள்ளன. அவை வாடிக்கையாளர் தேவைகளை பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறனான முறையிலும் முகாமை செய்வதற்கும் தீர்த்து வைப்பதற்கும் நிறுவனங்களுக்கு உதவுகின்றன. இத்தகைய ஆதரவுச் சேவைகளில் பணம், காப்புறுதி, தொடர்பாடல், ஏற்பாட்டியல் மற்றும் போக்குவரத்து போன்றவை உள்ளடங்குகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) பணத்தின் இரண்டு (02) தொழிற்பாடுகளைக் (functions) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) காப்புறுதிக் கோட்பாடுகள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) வணிக நிறுவனம் ஒன்றிற்கு காப்புறுதி ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட MN (தனி) கம்பனி (MN)** என்பது போத்தல்களில் அடைக்கப்பட்ட பழப்பாகு (bottled fruit jam) தயாரிக்கும் பெரிய அளவு உள்நாட்டு நிறுவனம் ஒன்றாகும். இக்கம்பனியின் பண்ணைகளும் தயாரிப்புத் தொழிற்சாலையும் தென் மாகாணத்தில் அமைந்துள்ளன. சமீபத்தில் பழப்பாகுப் போத்தல்களை வழங்கல் செய்யுமாறு மாலைதீவில் உள்ள ஒரு சிறப்பங்காடியிடமிருந்து **MN** இற்கு ஓர் அழைப்புக் கிடைத்திருந்தது. **MN** இன் முகாமைப் பணிப்பாளரான **திருமதி. ஹேமாலி** கம்பனியின் விநியோக வழிமுறைகள் மற்றும் உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேலும் மேம்படுத்துவதற்கான சாத்தியத்தன்மை பற்றி கவனத்திற் கொள்கின்றார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) முறையற்ற விதத்தில் முகாமை செய்யப்படும் விநியோக வழிமுறை ஒன்றினால் ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் (தீமைகள்) மூன்றினைக் (03) **குறிப்பிடுக.**

(03 புள்ளிகள்)

(b) ஒரு சிறந்த விநியோக வழிமுறையைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று காரணிகளை (03) **அடையாளங் காண்க.**

(03 புள்ளிகள்)

(c) வணிகமொன்று அதன் செயற்பாடுகளை உலகளாவிய ரீதியில் ஏன் விரிவாக்க வேண்டும் என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

கல்வி அமைச்சின் உதவிச் செயலாளரான **திரு. அர்ஜுன்** என்பவர், இலங்கை கல்வி முறைமையில் தொழில்முயற்சி சார்ந்த கல்வியை விருத்தி செய்வதற்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச மானியத்திற்காக விண்ணப்பிக்க முன்மொழிவு ஒன்றைத் தயாரிக்கத் திட்டமிடுகிறார். **திரு. அர்ஜுன்,** வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்க முனையும்போது ஏற்படும் சிக்கல்கள் பற்றிப் புரிந்து கொண்டுள்ளார். மேலும், இத்தகைய எதிர்காலத் தொழில் முயற்சியாளர்கள் வளங்களைப் பெற்றுக்கொள்ளக் கைகொடுப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களை ஊக்குவிக்க அவர் திட்டமிடுகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஒரு தொழில் முயற்சியாளரின் நான்கு (04) பண்புகளைக் (characteristics) **குறிப்பிடுக.**

(04 புள்ளிகள்)

(b) இலங்கையின் பொருளாதாரத்திற்கு தொழில்முயற்சியாண்மை (entrepreneurship) ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**வைத்தியர் குணதாச** என்பவர் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் மத்திய மாகாணத்தில் ஒரு பிரசித்தி பெற்ற ஆயுர்வேத வைத்தியராக இருக்கிறார். அவர் கண்டியில் சொந்தமாக ஒரு உள்நாட்டு ஆயுர்வேத வைத்தியசாலையை வைத்திருக்கிறார். இந்த வைத்தியசாலையை அவரது மூத்த மகனான **ஆசிறி** முகாமை செய்கிறார். சிறந்த வாடிக்கையாளர் திருப்தியைப் பேணுவது அவர்களுடைய ஆயுர்வேத வைத்தியசாலையில் முதலிடத்தில் கவனத்திற் கொள்ளப்படுகிறது. கண்டிக்கு வருகைதரும் வெளிநாட்டவர்கள் பல்வேறு ஆயுர்வேத சிகிச்சைகளுக்காகவும் இந்த வைத்தியசாலைக்கு அடிக்கடி வருகை தருகின்றனர். **ஆசிறி,** தற்போதுதான் வியாபார முகாமைத்துவத்தில் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்திருப்பதுடன், தனது தந்தையின் வியாபாரத்தை உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் மேலும் விரிவாக்கத் திட்டமிடுகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மேற்படி நிறுவனத்தின் நான்கு (04) நாட்டதாரர்களை (stakeholders) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கு ''ஆயுர்வேத வைத்தியசாலையின்'' முகாமையால் எடுக்கப் படக்கூடிய நடவடிக்கைகள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.**

(04 புள்ளிகள்)

(c) இலங்கையில் செயற்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்கள் (SMEs) எதிர்கொள்கின்ற சவால்கள் இரண்டினை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட நீபிரஷ் கம்பனியானது** மேல் மாகாணத்தில் 40 விற்பனை நிலையங்களுடன்கூடிய ஒரு சிறப்பங்காடிச் சங்கிலியைக் கொண்டிருக்கிறது. இந்த விற்பனை நிலையங்கள் விரைவாக விற்பனை யாகின்ற நுகர்வுப் பொருட்களையும் (FMCG) அதேபோன்று புதிய காய்கறிகள் மற்றும் பழங்களையும் விற்பனை செய்கிறது. கம்பனி சொந்தமாக மத்திய மாகாணத்தில் மூன்று ஏக்கரில் பண்ணை ஒன்றை வைத்திருப்பதுடன் அங்கிருந்து அதன் உற்பத்திப் பொருட்களை மேல் மாகாணத்தில் உள்ள 40 விற்பனை நிலையங்களுக்கும் விநியோகம் செய்கிறது. **வரையறுக்கப்பட்ட நீபிரஷ் கம்பனியின்** சிறப்பங்காடி விற்பனை நிலையங்கள் தமது வாடிக்கையாளர்களின் தேவைகள் திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக பிரசித்திபெற்ற வர்த்தக நாமங்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருட்களையும் (branded goods) விற்பனை செய்கிறது. **வரையறுக்கப்பட்ட நீபிரஷ் கம்பனியினால்** பெரும்பாலான கொடுப்பனவுகள் காசோலைகள் மூலம் செய்யப்படுகின்றன.

**வரையறுக்கப்பட்ட நீபிரஷ் கம்பனி** தனது சொந்த போக்குவரத்து ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதில்லை என்பதுடன் அதற்குப் பதிலாக பழங்களையும் மரக்கறிகளையும் கொண்டு செல்வதற்கு இயங்கலைச் செயலி (online app) ஒன்றின் ஊடாக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துகிறது. இந்த ஏற்பாடுகள் போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்க அவர்களுக்கு உதவும் என கம்பனியின் முகாமை நம்புகிறது. எவ்வாறாயினும், இத்தகைய வெளிமூலமிடப்பட்ட (outsourced) விநியோக வாகனச் சாரதிகளால் வழங்கப்படும் தரமற்ற சேவை பற்றி விற்பனை நிலைய முகாமையாளர்களால் பல சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சமீபத்திய ஆண்டுகளில், மோசமான போக்குவரத்துச் சேவை காரணமாக பழங்கள் மற்றும் மரக்கறிகள் விரயமாவது கம்பனிக்கு பெரியதொரு நஷ்டத்தை ஏற்படுத்தி யிருக்கிறது. இதனால் கம்பனியின் முகாமை, தமது பழங்களையும் மரக்கறிகளையும் விநியோகம் செய்வதற்காக இரண்டு டிரக் வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்குத் தற்போது திட்டமிடுகின்றது.

பற்று அட்டை (debit card) மற்றும் கடன் அட்டை (credit card) கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்வதற்காக **வரையறுக்கப்பட்ட நீபிரஷ் கம்பனி**யின் சகல காசாளர்களுக்கும் தேய்ப்பு இயந்திரங்கள் (swipe machines) வழங்கப்பட்டுள்ளன. கோவிட்-19 நோய்ப் பரவலைத் தொடர்ந்து, முகாமையானது இயங்கலைக் கொடுப்பனவு (online payment) வசதிகளுடன்கூடிய கம்பனியின் சொந்த இணையத் தளத்தை விருத்தி செய்வதில் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. இது கம்பனியின் அனைத்து விற்பனை நிலையங்களையும் ஒன்றுடனொன்று வலையமைப்பின் ஊடாக இணைப்பதையும் தமது வியாபார நடவடிக்கைகளில் இலத்திரனியல் தொடர்பாடல் தெரிவுகளைப் பயன்படுத்துவதையும் இயலச் செய்யும். கம்பனிக்கு புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட IT முகாமையாளர், திட்டமிடப்பட்ட இணையத் தளத்தில் ERP முறைமையொன்றின் ஊடாக சகல வழங்கல் சங்கிலி நடவடிக்கைகளையும் கூட்டிணைக்கத் திட்டமிடுகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட நீபிரஷ் கம்பனி** தமது வியாபாரச் நடவடிக்கைகளுக்கு இலத்திரனியல் வர்த்தகத்தை (e-commerce) பயன்படுத்துகின்ற மூன்று (03) வழிகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ஒரு வினைத்திறனான போக்குவரத்து முறைமை ஊடாக **வரையறுக்கப்பட்ட நீபிரஷ் கம்பனி** இற்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் நான்கினை (04) **அடையாளங்காண்க**. (04 புள்ளிகள்)

(c) சிறந்த போக்குவரத்து முறைமை ஒன்றின் தன்மைகள் (qualities) மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(d) காசோலைகளைப் பயன்படுத்துவது காசு பயன்படுத்துவதைக் காட்டிலும் அதிக அனுகூலமானது எனக் கருதப்படுவதற்கான காரணங்கள் மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(e) **வரையறுக்கப்பட்ட நீபிரஷ் கம்பனி** இனால் பயன்படுத்தக்கூடிய இலத்திரனியல் தொடர்பாடல்களுக்கு நான்கு (04) உதாரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |